ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2397/68 - 2024 අගෝස්තු මස 16 වැනි සිකුරාදා - 2024.08.16

2397/68 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KDS/AKUI/4/2/1/102.
சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் குறிப்பு
இல.: 4-3/18/2020/WS/81.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் அக்குரணை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 581 கொண்ட கொனகலகல கிராம அலுவலர் பிரிவில் கொனகலகல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை யாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட 2023.10.10 ஆம் திகதிய இல. கா.சி. 320668 கொண்ட கடஸ்ரல் வரைபடத்தில் காணித் துண்டு இல. 02 மற்றும் 03 எனக் காட்டப்பட்டுள்ள கின்னரபேல கும்புர எனும் பெயர் கொண்ட காணியின் மொத்தமாக 0.0562 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் எல்லைகளினுள் அமைந்துள்ள காணித் துண்டுகள் 02 இன் விபரங்கள் பின்வருமாறு :

**01. துண்டு இல. 02 - காணியின் பெயர் : கின்னரபேல கும்புர; உரிமை கோருவோரின் பெயரும் முகவரியும் : கே.பீ.டி.கே. பிரியதர்ஷனி டி சில்வா, இல. 100, ஸ்ரீ விஜித்த மாவத்த, கொனகலகல, அலவதுகொட; விஸ்தீரணம் : 0.0370 ஹெக்டயார் (14.6 பேர்ச்)**

வடக்கு : காணித்துண்டு இல. 01 மற்றும் ஜீ.என். பிரேமவர்தன உரிமை கோரும் கின்னரபேல கும்புர; கிழக்கு : ஜீ.என். பிரேமவர்தன உரிமை கோரும் கின்னரபேல கும்புர மற்றும் காணித்துண்டு இல. 04; தெற்கு : காணித்துண்டு இல. 04, 03 மற்றும் கே.பீ.டி. கே.பீ.டி. சில்வா உரிமை கோரும் கின்னரபேல கும்புர; மேற்கு : கே.பீ.டி.கே.பீ.டி. சில்வா உரிமை கோரும் கின்னரபேல கும்புர மற்றும் காணித்துண்டு இல. 01.

**02. துண்டு இல. 03 - காணியின் பெயர் : கின்னரபேல கும்புர; உரிமை கோருவோரின் பெயரும் முகவரியும் :**



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கே.பீ.டி.கே. பிரியதர்ஷனி டி சில்வா, இல. 100, ஸ்ரீ விஜித்த மாவத்த, கொனகலகல, அலவதுகொடெ; விஸ்தீரணம் : 0.0132 ஹெக்டயார் (5.2 பேர்ச்)**

வடக்கு : கே.பீ.டி.கே.பீ.டி. சில்வா உரிமை கோரும் கின்னரபேல கும்புர, காணித்துண்டு இல. 02 மற்றும் 04; கிழக்கு : காணித்துண்டு இல. 02, 04 மற்றும் ஓடை (காய்ந்த); தெற்கு : காணித்துண்டு இல. 04, ஓடை (காய்ந்த) மற்றும் பாதை (பிரதேச சபை); மேற்கு : பாதை (பிரதேச சபை) மற்றும் கே.பீ.டி. கே.பீ.டி. சில்வா உரிமை கோரும் கின்னரபேல கும்புர.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அக்குரணை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உரிமை கோரல் தொடர்பில் காணி உறுதிகள் ஆகியன வற்றை சரிசீலனைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

டீ.ஆர்.கே. ஹென்னாயக,
பிரதேச செயலாளர்,
அக்குரணை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அக்குரணை,
2024, ஓகத்து 14.

EOG 08 - 0201

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 3/2/3/10/267.

காணி எடுத்தற் (திருத்தச்) சட்ட திருத்தப்பட்டபடி காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் கீழ் இல. 2016/33 மற்றும் 2017.04.26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் படி 13ஏ மற்றும் 14ஏ பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கடத்திரல் வரைபட இல. 510614 இன் தொகுதி இல. 02, தாள் இல. 03 இன் துண்டு இல. 500 மற்றும் கடத்திரல் வரைபட இல. 510614 இன் தொகுதி இல. 02, தாள் இல. 03 இன் துண்டு இல. 515 ஆகிய காணிப் பகுதிகளுக்குரிய பந்தி கீழ்வருமாறு திருத்தஞ் செய்யப்பட்டுள்ளதென இத்தால் மூலம் அறிவிக்கின்றேன்.

**01. துண்டு இல. 500**

காணியின் பெயர் : லிந்தமுலகும்புர; விபரம் : வீட்டுத்தோட்டம், 40 - 50 வயதுடைய தென்னை மரங்கள் 08, 10 - 20 வயதுடைய மஹோகனீ மரங்கள் 03 மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கை உள்ளது; உரிமை கோருவோர் : பி.ஏ.பி.கே. அத்துகோரலே, இல. 35, ஸ்ரீ தம்மானந்த மாவத்தை, பத்தலகெதர, வேயன்கொடை, (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம் : 0.0326 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 515**

காணியின் பெயர் : லிந்தமுலகும்புர; விபரம் : வயல்; உரிமை கோருவோர் : பி.ஏ.பி.கே. அத்துகோரலே, இல. 35, ஸ்ரீ தம்மானந்த மாவத்தை, பத்தலகெதர, வேயன்கொடை, (காணி எடுத்தலுக்கான இறுதிக் கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம் : 0.0610 ஹெக்டயார்.

எஸ்.பி. குணவர்தன,
பிரதேச செயலாளர்,
அத்தனகல்லை.

பிரதேச செயலகம்,
அத்தனகல்லை,
2024, ஓகத்து 12.

EOG 02 - 0202

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.